

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை



பேரவைக்குள் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2011 – 2016)

(பதினாறாவது பேரவை)

1 முதல் 7 வரையிலான அறிக்கைகள்

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை – 600 009.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2011–2012)

(பதினான்காவது பேரவை)

முதலாவது அறிக்கை

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள் 12 SEP 2011)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 009.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2011–2012)

(பதினான்காவது பேரவை)

முதலாவது அறிக்கை

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

11-167—1


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொருளடக்கம்

		பக்கம்
1.	2011–2012 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அமைப்பு ..	iii
2.	முகவுரை ..	v
3.	அறிக்கை ..	vii

இணைப்பு–1

1.	"தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின்" 2008–2009 ஆம் ஆண்டிற்கான முப்பத்து ஆறாவது ஆண்டறிக்கை பேரவைமுன் வைக்கப்படுவதில் ஏற்பட்டுள்ள காலதாமதம் குறித்து கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீனளத் துறைச் செயலாளர் அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் கருத்துரை ..	1–2
2.	"தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்" 2006–2007, 2007–2008 மற்றும் 2008–2009 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்குகள் பேரவைமுன் வைக்கப்படுவதில் ஏற்பட்டுள்ள காலதாமதம் குறித்து கைத்தறி, கைவினைப் பொருட்கள், துணிநூல் மற்றும் கதர்த்துறைச் செயலாளர் அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் கருத்துரை ..	3–5
3.	"தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின்" 2007–2008 ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை மற்றும் "தமிழ்நாடு சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின்" 2007–2008 மற்றும் 2008–2009 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் பேரவைமுன் வைக்கப்படுவதில் ஏற்பட்டுள்ள காலதாமதம் குறித்து நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறைச் செயலாளர் அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் கருத்துரை ..	6–8

இணைப்பு–2

1.	பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம் ..	9


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பதினான்காவது பேரவை

2011–2012 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அமைப்பு

(2011–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 03–ஆம் நாள் நியமனம் செய்யப்பட்டது)

<u>தலைவர்</u>

திரு. ஆர். சின்னசாமி

<u>உறுப்பினர்கள்</u>

திரு. பொன். ராஜா
திரு. இரா. மணிமாறன்
திரு. என்எஸ்என். நடராஜ்
திரு. கே.பி. நாகராஜன்
திரு. கா. தமிழரசன்
திரு. ப. சிவக்கொழுந்து
திரு. க. தினகரன்
திரு. க. அன்பழகன்
திரு. இரா. அண்ணாதுரை
திரு. அ. கணேஷ்குமார்

<u>சட்டமன்றப் பேரவைச் செயலகம்</u>

திரு. அ.மு.பி. ஜமாலுதீன்	:	செயலாளர்
திருமதி இரா. அமிர்தவல்லி	:	இணைச் செயலாளர்
திரு. சு. சந்திரன்	:	குழு அலுவலர் துணைச் செயலாளர் நிலை


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

முகவுரை

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு, பொது நிறுவனங்களின் கீழ் இயங்கும் தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் 2008–2009 –ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை, தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் 2006–2007, 2007–2008 மற்றும் 2008–2009 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் மற்றும் ஆண்டுக் கணக்குகள், தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் 2007–2008 ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை மற்றும் தமிழ்நாடு சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின் 2007–2008 மற்றும் 2008–2009 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் குறித்து 26.07.2011 அன்று சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் ஆய்வு செய்தது. இக்கூட்டத்தில் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீனளத் துறை, கைத்தறி, கைவினைப் பொருட்கள், துணிநூல் மற்றும் கதர்த்துறை மற்றும் நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, ஆகியவற்றின் செயலாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு மேற்காணும் அறிக்கைகள் காலதாமதமாக பேரவைக்கு அளிக்கப்பட்டது குறித்து விளக்கமளித்தனர். அரசுத் துறைச் செயலாளர் மற்றும் உயர் அலுவலர்கள் குழு முன் அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் முதலாவது அறிக்கையை (2011–2012) குழுவின் தலைவராகிய நான் பேரவைக்கு அளிக்கிறேன்.

2. தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் ஆண்டறிக்கை, தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் தணிக்கை அறிக்கைகள் மற்றும் ஆண்டுக் கணக்குகள், தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் தணிக்கை அறிக்கை மற்றும் தமிழ்நாடு சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின் ஆண்டறிக்கைகள் குறித்து சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர் மற்றும் உயர் அலுவலர்கள் அளித்த விளக்கத்தின் மீதான இவ்வறிக்கைக்கு 10.08.2011 அன்று குழு தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டது.

3. குழுவின் பணிகளுக்குப் பெரிதும் உதவிய சட்டமன்றப் பேரவைச் செயலாளர் அவர்களுக்கு குழு தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

சென்னை–600 009,
10.08.2011,
ஆடி–25
திருவள்ளுவர் ஆண்டு–2042.

ஆர். சின்னசாமி
தலைவர்,
பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அறிக்கை

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு (2011–2012) 26.07.2011 அன்று நடைபெற்ற குழுக் கூட்டத்தில், தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் ஆண்டறிக்கை, தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் தணிக்கை அறிக்கைகள் மற்றும் ஆண்டுக் கணக்குகள், தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் தணிக்கை அறிக்கை மற்றும் தமிழ்நாடு சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின் ஆண்டறிக்கைகள் கால தாமதமாகப் பேரவைக்கு அளிக்கப்பட்டமை குறித்து முறையே கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீனளத் துறை, கைத்தறி, கைவினைப் பொருட்கள், துணிநூல் மற்றும் கதர்த்துறை மற்றும் நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, ஆகியவற்றின் செயலாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் ஆகியோர் அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் முதலாவது அறிக்கை.

சென்னை–600 009,
10.08.2011,
ஆடி–25
திருவள்ளுவர் ஆண்டு–2042.

ஆர். சின்னசாமி
தலைவர்,
பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு – 1

தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழக ஆண்டறிக்கை தொடர்பாக கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீனளத் துறைச் செயலாளர் அளித்துள்ள பதில் மீதான குழுவின் கருத்துரை

நிறுவனத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைக்கு அளிக்கப்பட வேண்டிய நாள்	பேரவைக்கு அளிக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)
தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம்	2008–2009	31.03.2010	11.01.2011	36 வது அறிக்கை: 9 மாதங்கள் 10 நாட்கள்

துறையின் பதில்
(6)

தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம் கால்நடை பராமரிப்புத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய டாப்கோ நிறுவனம் 1973–ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது என்றும், அந்நிறுவனம் கோழி வளர்ச்சிக்கான நிறுவனமாக பல்வேறு மாவட்டங்களில் கோழிப்பண்ணைகளை நிர்வகித்து வந்ததாகவும், இந்நிறுவனம் அரசு சார்ந்த நிறுவனமாக இருந்தபோதிலும் கூட, இதை லாபம் ஈட்டக்கூடிய நிறுவனமாக நடத்த முடியவில்லை என்றும், அதனால் 29.12.2000–ல் இந்நிறுவனம் மூடப்பட்டது. இந்த நிறுவனத்தில் கிட்டத்தட்ட ரூ.8 கோடியே 50 இலட்சம் நஷ்டம் ஏற்பட்டது. (அதாவது Out Standing Loans of the Government) இந்த நிறுவனம் கொடுக்க வேண்டிய கடன்கள் கிட்டத்தட்ட ரூ.8 கோடியே 50 இலட்சம் இருந்ததாகவும் அது சம்மந்தமாக அரசு முடிவு எடுக்காமல், மூடமுடியாத சூழ்நிலையில் இருந்தது எனவும், தற்போது அந்த கோழியின நிறுவனப் பணிகளை கால்நடை பராமரிப்பு துறையினர் கவனித்து வருகிறார்கள் என்றும்,

துறையின் பதில் தொடர்ச்சி
(6)

இந்த வருடம் வருடாந்திர பொதுக்குழுக் கூட்டத்தில் (Annual General Body Meeting) வைத்து மறுபடியும் இறுதியாக மூடிவிட்டு கம்பெனி பதிவிலிருந்து கூட பெயரை எடுக்கலாம் என்று அரசுக்கு கருத்துரு இருக்கிறது. இதனால் ஒவ்வொரு ஆண்டும் அறிக்கையை சட்டமன்றப் பேரவையில் வைக்க வேண்டிய அவசியம் ஏற்படாது எனவும், இந்த நிறுவனத்தில் தற்பொழுது எந்த செயல்பாடும் கிடையாது என்றும், இங்கு பணியாற்றியவர்களை கால்நடை பராமரிப்புத் துறையில் ஏற்பட்ட காலி இடங்களில் பணியில் அமர்த்தி இருப்பதால் தற்போது இருக்கக்கூடிய அதிகாரிகள் மூலமாக அறிக்கை தயார் செய்திருப்பதாகவும் குழுவின் முன் விளக்கமளித்தார்.

வருங்காலங்களில் தாமதத்தினை தவிர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும், இக்கழகத்தினை மூடுவதற்கு அரசுக்குக் கருத்துரு அனுப்பப்பட்டிருப்பதாகவும், இறுதி நடவடிக்கைக்குப் பிறகு குழுவிற்கு தகவல் அனுப்புவதாகவும் துறைச் செயலாளர் தெரிவித்தார்.

குழுவின் கருத்துரை
(7)

தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் 2008–2009 ஆம் ஆண்டிற்கான 36–வது ஆண்டறிக்கை பேரவைக்கு அளிப்பதில் ஏற்பட்ட காலதாமதம் குறித்து அரசுத் துறைச் செயலாளர் மற்றும் கூடுதல் இயக்குநர், கால்நடைப் பராமரிப்பு மருத்துவப் பணி அவர்கள் அளித்த விளக்கத்தினை ஏற்றுக் கொள்ளலாம் என குழு முடிவு செய்தது. இனி வருங்காலங்களில் இதுபோன்ற காலதாமதங்கள் எற்படாமல் ஆண்டறிக்கை பேரவைக்கு அளிக்கப்பட வேண்டும் எனவும், தவிர்க்க இயலாத நேர்வுகளில் கால தாமதத்திற்கான அறிக்கைக்கு துறை அமைச்சரின் ஒப்புதல் பெற்று அதன் நகலை ஆண்டறிக்கையுடன் இணைத்து பேரவைக்கு அளிக்கப்பட வேண்டும் எனவும் குழு பரிந்துரை செய்கிறது. மேலும், குழுவின் சந்தேகங்களுக்கு தெளிவான விளக்கத்தினை அளித்த துறைச் செயலாளருக்கு தனது நன்றியினையும், பாராட்டுதலையும் இக்குழு தெரிவிக்கிறது.

தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் தணிக்கை அறிக்கைகள் மற்றும் கணக்குகள் குறித்து கைத்தறி, கைவினைப் பொருட்கள், துணிநூல் மற்றும் கதர்த்துறைச் செயலாளர் அளித்த பதில் மீதான குழுவின் கருத்துரை

நிறுவனத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைக்கு அளிக்கப்பட வேண்டிய நாள்	பேரவைக்கு அளிக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)
தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம்	2006–2007	31.03.2008	12.11.2008	7 மாதங்கள் 11 நாட்கள்
	2007–2008	31.03.2009	08.01.2010	9 மாதங்கள் 7 நாட்கள்
	2008–2009	31.03.2010	10.02.2011	10 மாதங்கள் 9 நாட்கள்

துறையின் பதில்

(6)

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் 2006–2007, 2007–2008 மற்றும் 2008–2009–ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் காலதாமதமாக பேரவைக்கு அளிப்பதற்கு காரணம் 2003–2004–ஆம் ஆண்டிலிருந்து தணிக்கை அறிக்கை சட்டமன்றத்தில் அளிப்பதற்கு காலதாமதம் ஏற்பட்ட காரணத்தினால்தான் என்றும், அதன் தொடர்ச்சியாக 2006–2007, 2007–2008 மற்றும் 2008–2009–ஆம் நிதியாண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் அளிப்பதிலும் காலதாமதம் ஏற்பட்டது எனவும், தற்போது புதிய அரசு பொறுப்பேற்றவுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்துறையை ஆய்வு செய்து, துறையினுடைய செயல்பாடுகளை நன்கு ஆராய்ந்து அதனை சரிசெய்ய வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டதால் தற்போது இத்துறை நன்கு இயங்கிவருவதாகவும், இத்துறையில் கட்டடங்கள், தளவாடச் சாமான்கள் இருக்கின்றன. ஆனால், இலாபத்தில் இயங்காமல் நஷ்டத்தில் இயங்கி வருவதால் இத்துறையில் முதலீடுகள் அதிகமாக இருந்தும், வருமானம் அதிகமாக

இல்லாமல் சில நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் நஷ்டத்தில் இயங்கி வருவதால் ஆண்டறிக்கை தாக்கல் செய்ததில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என தலைமை செயல் அலுவலர், கதர் கிராமத் தொழில் வாரியம் அவர்கள் குழுவின் முன் விளக்கம் அளித்தார்.

2006–2007, 2007–2008 மற்றும் 2008–2009 ஆகிய மூன்று நிதியாண்டுகளிலும் ஆண்டு தணிக்கை அறிக்கை தாக்கல் செய்வதற்கு காலதாமதம் ஏற்பட்டதற்கான காரணம் 2003–2004–ஆம் ஆண்டின் அறிக்கையை தாக்கல் செய்ததில் முந்தைய காலங்களில் தாமதமாக வைக்கப்பட்டுள்ளதில் ஏற்பட்ட இதன் தேக்க நிலை என்றும், இதன் விளைவாக மற்ற ஆண்டுகளுக்கான அறிக்கைகளை குறிப்பிட்ட கால கெடுவிற்குள் தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், இதனை ஆய்வு செய்து, அதனை சரிசெய்து 2009–2010–ஆம் ஆண்டிற்கான தணிக்கை கொடுக்கப்பட்டுள்ளதாக அரசுச் செயலாளர் குழுவின் முன் மேலும் கூடுதல் விளக்கம் அளித்தார்.

2003–2004–லிருந்து தொடர்ந்து காலதாமதம் ஏற்பட்டு வருவதாகவும், ஒரு வருட காலத்திற்குள்ளாக பேரவையில் அறிக்கை வைக்க வேண்டும் எனவும், 2009–2010–ஆம் ஆண்டு அறிக்கையை 2011–ஆம் ஆண்டு ஏப்ரல் அல்லது மே மாதத்தில் வைத்திருக்க வேண்டும். உரிய காலத்தில் அறிக்கையை பேரவையில் வைப்பதற்கு துறை ரீதியாக என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறீர்கள் என செயலாளர், சட்டமன்றப் பேரவை வினவியபோது இந்த ஆண்டில் காலதாமதத்தை வெகுவாக குறைத்துள்ளதாகவும், 2009–2010–ஆம் ஆண்டிற்கான அறிக்கையை மார்ச் மாதத்திலேயே முடித்து விட்டதாகவும், 2010–2011–க்கு கால அவகாசம் வேண்டும் எனவும், அதற்குப் பிறகு Local authority Audit செய்ய வேண்டும் என தலைமைச் செயல் அலுவலர் குழுவின் முன் தனது கருத்தை தெரிவித்தார்.

சட்டமன்றம் நடக்கும் போது அறிக்கை வைத்தால்தான் உறுப்பினர்கள் அவற்றைத் தெரிந்து கொண்டு அமைச்சரிடத்தில் கேள்வியை கேட்க இயலும் என்றும், அக்டோபர் மாதம் அறிக்கையை கொடுத்தால் அது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பயனில்லாமல் போய் விடும் என குழு தனது கருத்தை வலியுறுத்தியதும், அதற்கிணங்க தலைமைச் செயல் அலவலர் பட்ஜெட் கூட்டத் தொடரிலேயே அறிக்கையை வைப்பதற்கான முயற்சிகளை நாங்கள் மேற்கொள்கிறோம் என குழுவின் முன் தெரிவித்தார்.

மேற்கூறிய அறிக்கைகள் பேரவையில் தாமதமாக வைக்கப்பட்டது குறித்து துறைச் செயலாளர் அளித்த பதில் குழுவிற்கு திருப்தி அளிப்பதாக இல்லை. எனவே, குழு இது குறித்து தனது காலதாமதத்திற்கான வருத்தத்தினை தெரிவித்தது. மேலும், 2010–2011–ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை உரிய நேரத்தில் அவைக்கு வைக்கப்படுவது குறித்து செயலாளர் அளித்த விளக்கம் குழு ஏற்கத்தக்கதாக இல்லை. எனவே, வருங்காலங்களில் இதுபோன்ற காலதாமதத்தினை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும் என குழு பரிந்துரைத்தது.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் 2006–2007, 2007–2008 மற்றும் 2008–2009.ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்குகள் பேரவைக்கு அளிப்பதில் மிகுந்த காலதாமதம் ஏற்பட்டிருப்பது குறித்து துறைச் செயலாளர் அளித்த விளக்கம் குழுவிற்கு திருப்திகரமாக இல்லை. எனவே, இனிவருங்காலங்களில் தணிக்கை அறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்குகள், குறித்த காலத்திற்குள் பேரவையில் வைக்கப்படவேண்டும் எனவும், அவ்வாறு இல்லாமல் காலதாமதம் ஏற்படும் நேர்வில் காலதாமதம் குறித்து துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று அது குறித்த விளக்கத்தின் நகலை ஆண்டறிக்கைகளுடன் இணைத்து பேரவைக்கு அளிக்கப்படவேண்டும் எனவும் குழு பரிந்துரை செய்கிறது.

11-167—3a

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் தணிக்கை அறிக்கை மற்றும் தமிழ்நாடு சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின் ஆண்டறிக்கைகள் குறித்து நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறைச் செயலாளர் அளித்த பதில் மீதான குழுவின் கருத்துரை

நிறுவனத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைக்கு அளிக்கப்பட வேண்டிய நாள்	பேரவைக்கு அளிக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)
தமிழ்நாடு கடல்சார் வாரியம்	2007–2008	31.03.2009	10.05.2010	1 வருடம் 1 மாதம் 9 நாட்கள்
தமிழ்நாடு சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம்	2007–2008	31.03.2009	11.11.2010	1 வருடம் 7 மாதங்கள் 10 நாட்கள்
	2008–2009	31.03.2010	11.11.2010	7 மாதங்கள் 10 நாட்கள்

துறையின் பதில்

(6)

தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் 2008–2009 மற்றும் 2009–2010–ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் சட்டமன்றத்தில் காலதாமதம் இல்லாமல் வைக்கப்பட்டுள்ளன என்றும், 2007–2008–ஆம் ஆண்டிற்கான கடல்சார் வாரியத்தின் தணிக்கை அறிக்கை முடிக்கப்பட்டு சட்டமன்றத்தில் வைப்பதில்தான் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என அரசு முதன்மைச் செயலாளர்/துணைத் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் குழுவின் முன் தெரிவித்தார்.

மேலும் 2007–2008, 2008–2009 மற்றும் 2009–2010–ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் 2010 மே மாதத்தில் முடிக்கப்பட்டு விட்டதாகவும், 2010–2011–ஆம் ஆண்டிற்கான கணக்குகள் மட்டுமே முடிக்கப்பட வேண்டியுள்ளதாகவும், மேலும் சில கூடுதல் விவரங்களை அரசுச் செயலாளர், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அவர்கள் குழுவின் முன் தெரிவித்தார்.

துறை உரிய கால கட்டத்தில் கணக்குகள் தொகுக்கப்படாததற்கு சில கணக்குகள் ஒத்திசைவு செய்ய வேண்டி இருந்தது என காரணமும், மேலும் நிறுவனங்கள் சட்டப்படி பட்டயக் கணக்காளர்களை நியமனம் செய்யும் முறை தமிழ்நாடு கடல் சார் வாரியத்திற்கு பொருந்தாது என தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது குறித்து குழுவிற்கு விளக்கம் அளிக்குமாறு கோரியது. தமிழ்நாடு கடல்சார் வாரிய கணக்குகளை மாநில கணக்காய்வுத் தலைவர் 15 நாட்களில் ஆய்வு செய்து முடித்து விடுவார்கள் எனவும், இந்த வாரியத்தின் கணக்குகள் சிவில் தணிக்கையில் வருவதால் கணக்காய்வுத் தலைவர் கணக்குகளைத் தொகுத்து டெல்லி பாராளுமன்றத்தில் ஒப்புதலைப் பெற்று அனுப்பி 15 நாட்களில் திரும்பப் பெறப்படும். நிறுமனங்கள் சட்டப்படி பட்டயக் கணக்காளர்களை நியமனம் செய்யும் முறை தமிழ்நாடு கடல்சார் வாரியத்திற்கு பொருந்தாது என தலைமைக் கணக்கு அலுவலர் மற்றும் செயலர் குழுவின் முன் விளக்கம் அளித்தார்.

2007–2008 மற்றும் 2008–2009 ஆம் ஆண்டுகளுக்கான மூன்றாவது மற்றும் நான்காவது அறிக்கைகள் காலதாமதமாக பேரவைக்கு அளித்ததற்கான காரணமாக, செயல் இயக்குநர், தமிழ்நாடு சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின் சார்பில் பாரத பிரதமர் கிராமச் சாலைத் திட்டத்தின் கீழ் 20 மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதாகவும், ஒரே ஒரு கணக்கர் மட்டுமே பணியில் உள்ளதால், அனைத்து மாவட்டங்களிலும் விவரங்கள் சேகரிக்கபடாத நிலை குறித்து தனது விளக்கத்தினை அளித்தார்.

துறையின் பதில் தொடர்ச்சி

(6)

2006–2007–ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கையை பேரவையில் வைப்பதில் ஏற்பட்டுள்ள காலதாமதம் குறித்து துறைச் செயலாளர் போதிய பணியாளர்கள் இல்லாததன் காரணமாக காலதாமதம் ஏற்பட்டது என்றும், தற்போது வெளியிலிருந்து ஆட்களை எடுத்து மின் அஞ்சல் மூலமாக விவரங்களைச் சேகரித்துக் கொண்டிருப்பதாகவும், இனி வருங்காலங்களில் காலதாமதமின்றி அறிக்கைகள் வைக்கப்படும் என குழுவின் முன் தெரிவித்தார்.

இனிவருங்காலங்களில் காலதாமதமின்றி அறிக்கைகளை தாக்கல் செய்வதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்வோம் என துறைச் செயலாளர் குழுவின் முன் சாட்சியம் அளித்தார்.

குழுவின் கருத்துரை

(7)

தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் 2007–2008–ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை, தமிழ்நாடு சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின் 2007–2008 மற்றும் 2008–2009–ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டு அறிக்கைகளை பேரவைக்கு அளிப்பதில் மிகுந்த காலதாமதம் ஏற்பட்டிருப்பது குறித்து குழு தன் வருத்தத்தினை தெரிவிக்கிறது.

அரசுத் துறைகளின் பணிகளில் கால தாமதம் ஏற்படுவது தவிர்க்கப்பட வேண்டும். உரிய நேரத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டால்தான் பொதுமக்களுக்கு பலன் கிடைக்கும் என மேலும் குழு பரிந்துரைத்தது.

எனவே, இனிவருங்காலங்களில் இதுபோன்ற காலதாமதங்கள் ஏற்படாமல் உரிய காலத்தில் அறிக்கைகளை பேரவையில் வைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

இணைப்பு–2

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்

14.07.2011 (முதல் கூட்டம்)	சென்னை
26.07.2011	சென்னை




தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS